RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s1018

# மீராவின் ஊசிகள் கவிதையில் அடித்தட்டு மக்களின் அவல நிலைகள்

**ஸ். சில்வியா ஜூலியட் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, மங்கையற்கரசி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பரவை, மதுரை- 625402, தமிழ்நாடு, இந்தியா.

# The Plight of the Lower Class in the Poem "Meera's Needles"

**S. Silvia Juliet [a, *]**

[a] Department of Tamil, Mangayarkarasi College of Arts & Science for Women, Paravai, Madurai-625402, Tamil Nadu, India.

* Corresponding Author: silviajuliet33@gmail.com

Received: 08-09-2021
Revised: 30-05-2022
Accepted: 11-06-2022
Published: 12-08-2022

Check for updates

**ABSTRACT**

Literature is a reflection of society. Literature focuses on human life; it is a feast for human thought, feelings, and imagination; it is related to human language and being literary; it has the power to stir the mind of the learner and blossom in the heart. Literature with such characteristics is created according to the author's experience, concentration, human relationships, and effort. Poetry is one of the genres of literature. Meera's figurative poems, which are high in idealism, excellent in public welfare, innovative and attractive, depict the lives of lower class people without leaving room for imagination or artifice and make the readers think. This article explains them.

**Keywords:** Meera's Needles, Poem, Literature, Grassroots Peoples

## முன்னுரை

இயல்பான பொருள் வெளிப்படையாகக் காட்டும் கவிதை, உணர்ச்சி, கற்பனை, கருத்துக்களை வெளிப்படுத்தவும் தூண்டவும் உதவுகின்றது. அறிஞர்களுள் சிலர் கவிதைக்கலையினால் கல்வியறிவு வளர்வதாக நம்புகின்றனர். காலத்திற்கு காலம் மொழி தன்மை புதுப்பித்துக்கொள்வது போல் கவிதையியலும் பொருளின் தன்மை மாறுபடுகிறது எனலாம். கவிதை எழுதுவது, விதை விதைப்பது போன்றதே. மண்ணைக் கிழிக்காமல் விதைகள் முளைப்பதில்லை. கவிதை இந்த மண்ணைக் கிழித்து முளைத்து ஆல விருட்சமாக வளர்த்து நிற்கிறது. இதில் மண் என்பது தேசத்தையும் மக்களையும் குறிக்கிறது. சமூகத்தை புனரமைப்பது, சமூகத்தை மாற்றுவது, அவலங்களை வெளிப்படுத்துவது போன்றவை மீராவின் கவிதைகளில் சாரமாக அமைகின்றன. மீராவின் ஊசிகள் கவிதை தொகுப்பு, அடித்தட்டு மக்களின் சமூக அநீதிகளைத் தட்டிக் கேட்கத் தூண்டும் ஒரு கூர்மையான வாளாக உள்ளது எனலாம். அவற்றைக் குறித்து இக்கட்டுரை ஆராய உள்ளது.

## அடித்தட்டு வர்க்கம்

அடித்தட்டு வர்க்கம் எனப்படுவது பொருளாதாரச் சமூக அடுக்கமைவில் மிகவும் பின் தங்கிய மக்கள் குழுவாகும். இவர்களை ஒட்டுமொத்தமாக வரையறை செய்வது கடினம். எவ்வளவு உழைத்தும் தொடர்ந்தும் பின் தங்கி நிற்கும் தொழிலாளர்கள், விவசாயிகள். போன்றோர் அடித்தட்டு வர்க்கம் என்ற வட்டத்துக்குள் வரக்கூடும்.

"ஆங்கிலத்தில் Working class, Underclass என்றும் வேறுபடுத்திக் காட்டுவர். அதற்கு சற்று ஒத்து தமிழிலும் உழைப்பாளிகள், விளிம்பு நிலை மக்கள் என்ற சொல்லாடல்களும் உண்டு" என தமிழ் கலைக்களஞ்சியம் அடித்தட்டு வர்க்கத்திற்கு விளக்கம் அளிக்கிறது.

## அடித்தட்டு மக்களின் வறுமை

இலக்கியம் பயின்று பண்பாட்டு உள்ளம் உடையவர் மட்டுமே இலக்கியக் காட்சிகளைக் கண்டு பயன் பெற முடியும். அக்காட்சிகள் "அகக் கண்ணின் வாயிலாகவே உள்ளம் கொள்பவை ஆகலின் நீடு நின்று விரும்பும் போதெல்லாம் வந்து கலையின்பம் நல்குபவை என அறிஞர் மு வ கூறுகிறார் (Manivel, 2005)."

காட்சிகளைக் கண்முன் நிறுத்த வல்லவர்களும் கவிஞர் மீராவும் ஒருவரே. கவிதையில் வறுமையைக் கூறும் இடத்தில் வறுமையில் வாடும் மக்களை படிப்பவர்களின் கண்முன் நிறுத்துகிறார்.

இன்றைய நிலையில் வறுமையினால் ஏற்படும் வலி, துன்பம் என்பவை காரணமாக, வறுமை விரும்பத்தகாத ஒன்றாகவே கொள்ளப்படுகின்றது. "வறுமை என்பது, உணவு, உடை, உறைவிடம், பாதுகாப்பான குடிநீர், கல்வி பெறும் வாய்ப்பு, பிற குடிமக்களிடம் மதிப்புப் பெறுதல் போன்றவை உட்பட்ட, வாழ்க்கைத் தரத்தைத் தீர்மானிப்பவற்றை இழந்த நிலை ஆகும்."

வறுமையை கவிஞர் மீரா இவ்வாறு தன் கவிதையில் புனைகிறார். 'வறுமையே வெளியேறு' என்னும் கவிதையில் வறுமையை முழுமையாக வெளியேற்ற வேண்டும் என முழக்கம் இடுகிறார் தலைவர். வறுமை வெளியேறியதா?.

"நேற்று

செட்டியார் வீட்டுத்

திருமணப் பந்தியில்

எதுவும் பேசாது

எங்கள் தலைவர்

எட்டி உதைத்தார்

வறுமை,

வேக வேகமாய்

வெளியேறிற்று

பரட்டைத் தலையும்

எலும்பும் தோலும்

கிழிந்த கந்தையுமாக!"

என வறுமை நிலையில் உள்ள மக்கள் அடிப்படை உணவுக்கு ஏங்கும் நிலை இன்றும் உள்ளது என அடித்தட்டு மக்களின் நிலையைக் குறித்து கவிதை வரிகள் மூலம் மீரா உணர்த்துகிறார் (Kavignar Meera, 1974).

வறுமை நிலையில் உள்ளோர் சில சமயங்களில் தங்களின் அடிப்படை தேவைகளை பெற்றுக் கொள்ள ஒரு கிளர்ச்சியாளராக வேண்டிய சூழ்நிலை உள்ளது என்பதை 'ஒன்றே செய்க' என்னும் கவிதை சித்திரிக்கிறது.

சுடுங்கள்

உணவுக்கோரிக்

கிளர்ச்சி செய்தால்!

உடனே சுடுங்கள்

மக்களைக் காக்க

முடியவில்லையே

என்ற கவலை எதற்கு?

சட்டம் ஒழுங்கை யேனும்

சரியாய்க் காத்தால் போதும்

என்னும் கவிதை வரிகள் மூலம் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசாங்கம் ஆயத்தமாக இல்லை (Kavignar Meera, 1974). சட்ட ஒழுங்கைக் காக்கவே உள்ளது என்பதை உணர்த்துகிறது.

## பொருளாதார நிலை

பொருளாதார நிலையில் பின்தங்கிய பாமரமக்கள் தங்களின் சிக்கல்களை எதிர்கொள்ள முடியாமல், வாழ்வினை முடித்துக்கொள்ள விழைகின்றனர். இதை "இரண்டு பிணங்கள்" என்னும் கவிதை வரிகள் இவ்வாறு கூறுகின்றன.

"இரண்டு பிணங்கள் எதிர்எதிரே

மருத்துவர் வந்தார்

அறுத்துப் பார்த்தார்

தற்கொலை என்றார்

மூட்டைதூக்கிப்

பிழைக்கவும் முடியாப்

பூச்சி

மூட்டைப் பூச்சி மருந்தைக்

குடித்தான் உடனே

குளிர்ந்து போனான்

வைர வியாபாரி

மன்னார்சாமி

வாயில்

வைரக்கடுக்கனை நுணுக்கிப்

போட்டான் உடனே

விறைத்து போனான்"

எவ்வளவு செல்வம் இருந்தாலும், இன்னும் வேண்டும் வேண்டும் என நினைக்கும் வைரவியாபாரி, இறுதியில் சாவை எதிர்கொள்ள துணிந்தபோதும், வைரத்தையே பயன்படுத்துகிறான் (Kavignar Meera, 1974). ஆனால் மூட்டைதூக்கிப் பிழைப்பு நடத்தியும், அதற்கு ஏற்ற ஊதியம் இல்லாமல், இறுதியில் மருந்தைக் குடித்து இறந்த தொழிலாளியின் வாழ்வின் மூலம் எவ்வளவு உழைத்தாலும் முன்னேற்றம் இல்லை. இறப்பிலும் கூட ஏற்றத்தாழ்வு உள்ளது என்பதை மீரா கூறுகிறார்.

## இயலாமை நிலை

மருத்துவமனைகள் பொதுவாக இலாபம் அல்லது இலாப நோக்கற்ற பொதுத்துறை சுகாதார நிறுவனங்கள் ஆகும். "மருத்துவமனைகள் ஏழைகளுக்கான தரும இல்லங்கள், யாத்ரீகர்களுக்கான விடுதிகள் அல்லது மருத்துவமனை பள்ளிகளாக இடைக்காலத்தில் செயல்பட்டன. மருத்துவமனை என்ற சொல் இலத்தீன் மொழியில், விருந்தோம்பலைக் குறிக்கும் சொல்லில் இருந்து வந்ததாகும். விருந்தோம்பல் உபசரிப்பது என்ற பொருளை இச்சொல் குறிக்கிறது." ஆனால் இன்று அந்நிலை மாறி பலருக்கும் எட்டாக்கனியா உள்ளது. பொது மருத்துவத்தில் உள்ள அவல நிலை குறித்து மீரா உரைக்கிறார்.

"அழகர்சாமி
காச நோயின்
காரணமாக
ஆஸ்டின் பட்டி
அரசினர்
மருத்துவமனைக்கு
மனுப்போட்டானாம்
தங்கி
வைத்தியம் பார்க்க
அனுமதி வழங்கி
அஞ்சல் போனதாம்
அதற்குள் என்ன அவசரம்?
காலன் போட்ட
கடிதம் கண்டதும்
போய்ச் சேர்ந்தானாம்"

பொது மருத்துவமனையிலும் மருத்துவம் பார்க்க அரசியல் வாதிகளின் செல்வாக்கு தேவைப்படுகிறது (Kavignar Meera, 1974). அவ்வாறு இல்லாத சூழ்நிலையில் நோயாளிகளின் நிலை அவலம் என்னும் கருத்து புலனாகிறது.

## அறியாமை

பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள மக்கள் மேல்வர்க்கத்தினரின் ஆதிக்கத்தினை சமாளிக்க முடியாமல் பணிந்து போகும் போக்கும், துணிவில்லாமல் எதையாவது செய்து சமாளிக்கும் நிலையும் காணப்படுகிறது.

மானியம் இழந்த மன்னர் ஒருவர் தான் தொலைத்த பத்து காசை கண்டுபிடித்து தரும்படி தன் பணியாளிடம் கட்டளை இடுக்கிறார். எங்கு தேடியும் கிடைக்காத சூழலில், பணியாள் அதை சொல்ல துணிவில்லாமல், தன் பணத்தினைக் கொடுத்து மன்னரை சமாளிக்கிறார் என மீரா 'மானியம் இழந்த மறுநாள்' என்னும் கவிதையில் கூறுகிறார்.

அவலநிலை வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் கல்வி நிலையும் சில சமயங்களில் கேள்விக்குறியாகவே உள்ளது. காரணம் அரசாங்கம், ஆசிரியர்களுக்கு அறிவைப்புகட்டும்

பணியைமட்டும் தருவது இன்றி, மற்ற பணிகளையும் தருவதால் கல்விப் பணி தடைபடுவதாக கவிதையில் மீரா கூறுகிறார்.

"பள்ளி திறந்தது

அ - சொல்லிக் கொடுத்தோம்.

அப்புறம்

சீனி அட்டையைத்

தெரு தெருவாக

விநியோகிக்கப் போனோம்

அப்புறம்.... வாக்குப் போடும்

மன்னர் தொகையைக்

கணக்கெடுக்கப் போனோம்

தேர்வு வந்தது

ஃ சொல்லி முடித்தோம்"

என்னும் கவிதை வரிகள் ஆசிரியர்களின் அவல நிலையைச் சொல்வதுடன் கல்வி சிலருக்கு எட்டாக கனியாக உள்ளத்தையும் மறைமுகமாக கூறுகிறது (Kavignar Meera, 1974).

## அடிமை நிலை

தனிமனித சுதந்திரம் எதுவுமின்றி, ஒருவர் மற்றொருவருக்கு சேவை செய்யும் கட்டாய நிலை அடிமை எனப்படுகின்றார்கள்.

அடிமை நிலையில் இருக்கும் ஒருவர் பல்வேறு இன்னல்களை சந்திக்கும் நிலையில் இன்றும் உள்ளார். பின்தங்கியவர்கள் அதிகாரவர்க்கத்தினரால் இழிவுபடுத்தப்படும் நிலை காணப்படுகிறது. "தங்க முதலாளி" என்ற கவிதையில் ஒரு வேலைக்காரன் இவ்வாறு கூறுகிறார்.

"கொக்காகட்டும் கோழியாகட்டும்

எனக்கே முதலில்

மூக்குப் பிடிக்கத்

தின்று முடித்துநான்

மூச்சு விடுவதைப்

பார்த்த பிறகு தான்

இலையில் கையை

எடுத்து வைப்பர்."

அடிமைகள், பணிகளை மட்டும் செய்வது அன்று. முதலாளிகளின் உயிரைக் காக்கும் கடவுளாகவும் இருக்கிறார்கள் என நகைச்சுவையாக மீரா கவிதை பாடுகிறார் (Kavignar Meera, 1974).

## முடிவுரை

இன்றைய காலகட்டத்திலும் அடித்தட்டு மக்கள் நிலை மாறவில்லை என்பதையும், அவர்களுக்கு எதிராக சமூக அவலங்கள் தொடர்கிறது என்பதையும் மீரா அவர்கள் தம் கவிதை வழி

எடுத்துரைப்பதை இங்கனம் அறிய முடிகிறது. மேலும் மேல்வர்க்கத்தினரின் ஆதிக்க போக்கால் அடித்தட்டு மக்களுக்கு வேண்டிய அடிப்படை தேவைகள் கூட நிறைவாகவில்லை என்னும் கருத்தினையும் ஆணித்தரமாக தன் கவிதை வரிகளில் புனைந்துள்ளார் மீரா. படிம கவிதைகள் வழி சமூக அவலங்களைக் கூறி அதற்கான தீர்வினை அடைய வேண்டும் என்னும் கருத்தினை சமுதாயத்திற்கு உணர்த்தும் வகையின் மீராவின் கவிதைகள் உள்ளன

## References

Manivel, M., (2005) Ilakkiya Uravugal, Thamarai Publications, Chennai, India.

Meera, (1974) Oosigal, Seethai Pathippagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License